①  (G)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023

**FA7A**

Register No. | | | | | | | | |

**5398-22**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

BANKING LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Negotiable Instrument' and explain the salient features of Negotiable instrument.

   "மாற்றுமுறையாவணம்" என்பதை வரையறை செய்து மாற்றுமுறையாவணத்தின் சிறப்பியல்புகளை விளக்கவும்.

2. What are the criminal remedies available to the drawee in case of dishonour of cheque under the Negotiable Instruments Act, 1881?

   மாற்றுமுறையாவண சட்டம் 1881-ன் கீழ் ஒரு காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட நிலையில் காசோலை பெற்றவருக்கு கிடைக்கக்கூடிய குற்றவியல் தீர்வழிகள் யாவை?

3. What are the advantages and disadvantages of nationalisation of Banks in India?

   இந்திய வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதின் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State and explain the attachment of deposits by the Income Tax Authorities.

   வருமானவரித் துறை அதிகாரிகளால் வைப்பீடுகள் பற்றுகை செய்யப்படல் என்பதை எடுத்துக்கூறி விளக்குக.

5. Explain the principles that guide the banker in granting loans.

கடன்கள் அளிப்பதற்கு வங்கிகளுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் பற்றி விளக்கவும்.

6. Explain the duties of banker.

ஒரு வங்கியாளரின் கடமைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Banker's Lien

வங்கியரின் பற்றுரிமை

(b) Crossing of cheques

காசோலைகளைக் குறுக்குக் கோடிடல்

(c) Traveller's cheques

பயணிகள் காசோலைகள்

(d) NABARD

நபார்டு

(e) Indemnity Bond

ஈட்டுறுதிப் பத்திரம்

(f) Overdraft

மிகைப் பற்று

(g) Paying banker

பணம் கொடுக்கும் வங்கியர்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A" sells goods to "B". "B" pays to "A" through a cheque before "B" could obtain delivery of goods. But B's cheque has been dishonoured by the bank. "A" refuses to give delivery of goods until paid. Is A"s action justified?

"அ" என்பவர் "ஆ" என்பவருக்கு சரக்குகளை விற்கின்றார். "ஆ" என்பவர் ஓர் காசோலை மூலம் "அ"விற்கு சரக்குகளை பெறும் முன் பணம் தருகிறார். ஆனால் "ஆ" கொடுத்துள்ள காசோலையினை வங்கியர் நிராகரித்து விடுகின்றார். இச்சூழ்நிலையில் "அ" என்பவர் பணம் தரும் வரையிலும் சரக்குகளை தர மறுக்கிறார். "அ" வின் இச்செயல் நியாயமானதா?

9. Ravi draws a Bill of Exchange payable at 50 days after the arrival of the ship 'Ganga' at Vishakapattinam. Is the instrument valid?

ரவி என்பவர் 'கங்கா' என்ற கப்பல் விசாகப்பட்டினம் வந்தடைந்த 50 நாட்கள் கழித்து பணம் தருவதாக ஓர் மாற்றுச்சீட்டை வரைகிறார். இந்த ஆவணம் செல்லுபடியாகுமா?

10. 'A', obtains a cheque and puts it in his coat pocket. The coat is sent for dry wash. Consequently the cheque becomes faded. Can the bank refuse to pay it?

'அ' என்பவர் காசோலை ஒன்றினைப் பெற்று அதனை மேலங்கியில் உள்ள பாக்கெட்டில் வைத்துக் கொள்கிறார். அந்த மேலங்கியை உலர் சலவைக்காக கொடுத்தனுப்புகிறார். அதன் விளைவாக அந்த காசோலை மங்கி விடுகிறது. வங்கியர் அக்காசோலையை ஏற்க மறுக்கலாமா?

---

(2)

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY

Register No.

**FA7B**

**5508–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.**

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

**LABOUR LAW – II**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. The evolution of Social Security measures in the Indian context. Explain.
   இந்தியாவில் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் பரிணாமத்தை விளக்குக.

2. Explain the amount of compensation under Employees' Compensation Act, 1923.
   தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923-ன் கீழ் இழப்பீட்டு தொகையை விளக்குக.

3. Explain the provisions of Employees State Insurance Court.
   தொழிலாளர் காப்பீட்டு நீதிமன்றத்தின் வகையங்களை விளக்குக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the concept of gratuity and when the employee is eligible for gratuity.
   பணிக்கொடையின் கருத்தையும் தொழிலாளி பணிக்கொடைக்கு எப்போது தகுதியுடையவர் என்பதையும் விளக்குக.

5. State the welfare measures under the Factories Act, 1948.
   தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன் கீழ் நல்வாழ்வு நடவடிக்கைகளை குறித்து கூறுக.

6. Explain the opening and closing hours of shops under the Tamil Nadu Shops and Establishment Act 1947.
   தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947-ன் கீழ் கடைகளை திறப்பதற்கும் மூடுவதற்கும் உள்ள நேரத்தை விளக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Rate of gratuity.

   பணிகொடையின் அளவு.

   (b) Employees Pension Scheme.

   தொழிலாளர் ஓய்வூதிய திட்டம்.

   (c) Eligibility for Bonus.

   மீதூதியத்திற்கான தகுதி.

   (d) Maternity benefit.

   பேறுகால நலன்.

   (e) Fencing of Machinery.

   இயந்திரத்தை வேலியடைத்தல்.

   (f) Allocable surplus.

   பிரிக்கப்படவேண்டிய உபரித்தொகை.

   (g) Employment injury.

   தொழில் தீங்கு.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The process carried out in salt works in converting sea water into salt. Whether it comes within the meaning manufacturing process?

   கடல்நீரை உப்பாக மாற்றும் உப்பு தொழில் அணுகுமுறை உற்பத்திபொருள் என்னும் பதத்தில் வருமா?

9. 'A' a timekeeper in workshops and who maintains the leave accounts of the workshop staff, whether he is a workman within the meaning of S.2(1) of the Factories Act?

   ஒரு பட்டறையில் பணிபுரியும் பணியாளர்களின் விடுமுறையை கணக்கிடும் ஒரு நேரக் காப்பாளர் தொழிற்சாலை சட்டத்தில் உள்ள பிரிவு S.2(1)-ன் கீழ் 'பணியாள்' என்ற பதத்தில் வருவாரா?

10. In a shop, employee is allowed to work eight hours in a day. How much time he is entitled to interval under the Tamil Nadu Shops and Establishment Act, 1947?

    கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ன் படி ஒரு தொழிலாளி ஒருநாள் எட்டு மணி நேரம் வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறார். அவர் அச்சட்டப்படி எவ்வளவு காலம் இடைவேளை பெற்றுக் கொள்ள முடியும்?

Register No. | | | | | | | | |

**FSC**

**[5459-22]**

(For the candidates admitted from 2009 – 2010 to 2016 – 2017)

B.A. B.L./B.A. LL.B. DEGREE EXAMINATIONS, DECEMBER 2022.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

# ENVIRONMENTAL LAW

Time : Three hours — Maximum : 100 marks

## PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding six pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Critically analyse the contributions made by the National Green Tribunal towards seeking the Environmental Justice.

   சுற்றுச்சூழல் நீதி பெறும் வகையில் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் பங்களிப்பினை கூர்ந்தாய்வு செய்து திறனாய்வு செய்க.

2. "Right to wholesome environment is a fundamental right" – Analyse.

   முழுமையான சுற்றுப்புற சூழ்நிலைக்கான உரிமையானது ஒரு அடிப்படை உரிமையாகும் – கூர்ந்தாய்வு செய்க.

3. Discuss the procedure established for disposing e-waste in India.

   இந்தியாவில் மின் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்குரிய நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை விவாதிக்க.

4. Discuss the powers and functions of the State Pollution Control Board.

   மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் செயலாக்கம் பற்றி விவாதிக்க.

5. Explain the significance of the Rio Declaration 1992 in achieving environmental sustainability.

   வளங்குன்றா வளர்ச்சியை அடைவதில் ரியோ விளம்புகை 1992ன் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :

பின்வருபவைவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக

(a) Reserve Forest

ஒதுக்கப்பட்ட காடுகள்

(b) Mass Tort Action

பெருமளவு தீங்கு செயல்பாடு

(c) M.C. Mehta vs Kamal Nath

எம்.சி. மேத்தா எதிர் கமல்நாத்

(d) Polluter pays Principle

மாசு ஏற்படுத்துபவர் கட்டணம் செலுத்தும் நெறிமுறை

(e) Carbon footprint

கரியமிலத் தடம்

(f) Taj Mahal case

தாஜ் மஹால் வழக்கு

(g) Recycled Plastics

மறுசுழற்சி நெகிழி

(h) Kyoto Protocol

கியோட்டோ நெறிமுறை

(i) Rain water harvesting

மழை நீர் சேகரித்தல்

(j) Land Resource Management

நில வள மேலாண்மை

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருபவைவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. In a "Zilla Parishad" premises loud speakers were used for organizing wedding and other functions. Further enquiry revealed that emanation of sound disturbed the residents. A Public Interest petition was filed before the High Court. Zilla Parishad contended that High Court does not have jurisdiction. Decide.

"ஜில்லா பரிசஹாத்" இடத்தில் திருமணங்கள் மற்றும் இதர விழாக் காலங்களில் ஒலிபெருக்கி பயன்படுத்தியது. அப்பகுதியில் விசாரணை மேற்கொண்ட பொழுது, இதன் பயன்பாடு அவ்விடத்தில் வசிக்கும் மக்களுக்கு பெரும் தொல்லையாக இருந்து வந்தது. ஆதலால் பொது நல வழக்கு உயர்நீதிமன்றத்தில் முன்னிடப்பட்டது. ஜில்லா பரிசஹாத் வாதத்தில் உயர்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என வாதிட்டது. தீர்மானிக்க.

8. In Vizakapatnam, the traditional system of aqua-culture gave way to extensive and intensive shrimp culture farming with an eye on export. Agriculture farmlands were converted into commercial aqua-culture farms on a large scale. The transformation led to salination of ground water and not helpful for agricultured. Hence the farmers of Vizakapatnam approached the High Court. The owners of shrimp culture farms pleaded the right to livelihood-Decide.

விசாகபட்டினம் பகுதியில் ஏற்றுமதி கண்ணோட்டத்தோடு வழக்கமான மீன் பண்ணை தொழில், அதி நவீன, விரிவான மற்றும் தீவிர இறால் பண்ணை தொழிலுக்கு வழிவிட்டது. விவசாய விளைநிலங்கள் வியாபார நோக்குடன் பெருமளவு தீவிர இறால் பண்ணையாக மாறின. இதனால் அப்பகுதியில் நிலத்தடி நீர் உப்புத் தன்மை பெற்று விவசாயத்திற்கு உதவும் தகுதியை இழக்க ஆரம்பித்தது. எனவே இப்பகுதி விவசாயிகள் உயர்நீதி மன்றத்தை அணுகினர். இறால் பண்ணை உரிமையாளர்கள் தங்களுக்கு வாழ்க்கைப் பொருள் தேடும் அடிப்படை உரிமை உண்டென வாதிட்டனர் தீர்மானிக்கவும்.

9. The Directorate General of Foreign Trade permitted to import goods to be dumped in India under the export import policy. 'Waste links', an NGO, brought a case claiming e-waste is dumped in India which is contrary to e-waste rules and filed a case against the directorate before National green Tribunal-Decide.

வெளிநாடு வர்த்தக பொது இயக்குநரகம் இந்தியாவில் வெளிநாடு கணினி கழிவுகளை இறக்குமதி செய்ய அனுமதித்தது. இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையின் படி குப்பைகளை குவித்தது. "கழிவுகள் தொடர்பகம்" என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் கணினி கழிவுகள் விதிகளுக்கு புறம்பாக குப்பைகள் இந்தியாவில் குவிக்கப்படுகின்றது என்று இயக்குநரகத்தை எதிர்த்து பசுமை தீர்ப்பாயத்தின் முன் வழக்கிட்டது -தீர்மானிக்க.

10. 'Jallikattu' or bullock cart races is organised in a state. A case was filed on the ground that it is unconstitutional for taming of the bulls, as it amounts to cruelty –Decide.

ஜல்லிக்கட்டு அல்லது மாட்டு வண்டி ஓட்டம் மாநிலம் ஒன்றில் நடைபெற்றது. இந்நிகழ்வு வாயிலாக காளைகளை அடக்குவது இரக்கமற்ற செயல் எனவும், அரசமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது எனவும் வழக்கிடப்பட்டது - தீர்மானிக்க.

11. Chief Wildlife warden granted fishing rights to tribals in a sanctuary. A Public Interest litigation petition was filed against the order of the chief wildlife warden on the ground that it would affect the environment-Decide.

சரணாலயத்தில் பழங்குடியினருக்கு மீன் பிடிக்கும் உரிமைகளை தலைமை வன விலங்கு காப்பாளர் வழங்கினார். இச்செயல் அவ்விடத்தின் சுற்றுப்புறச் சூழலை பாதிக்கின்றது என்று தலைமை வன விலங்கு காப்பாளர் ஆணையை எதிர்த்து பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது - தீர்மானிக்கவும்.

12. The government of Kerala decided to convert the open space of a residential area into residential complex. The people residing in the area objected to the decision of the government and approached the court –Decide.

கேரள அரசு குடியிருப்புப் பகுதியில் உள்ள திறந்த வெளியில் மேலும் ஒரு குடியிருப்பு வளாகம் அமைத்திட தீர்மானித்தது. அக்குடியிருப்புப் பகுதியில் வசித்து வரும் மக்கள் அரசின் இம்முடிவிற்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தினை அணுகினர்-தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 20..
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA7D** **5400–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the scope and development of administrative law and distinguish it from constitutional law.

   நிர்வாகச் சட்டத்தின் அளாவுகை மற்றும் வளர்ச்சியை விளக்கி, அது எவ்வாறு அரசமைப்புச் சட்டத்தில் இருந்து வேறுபடுகிறது என்பதை விவரிக்கவும்.

2. Examine the permissible limits on the delegation of legislative power in India with the help of decided cases.

   இந்தியாவில் ஒப்படைவு விதியாக்க அதிகாரத்தின் அனுமதிக்கப்பட்ட எல்லையினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு ஆய்வு செய்க.

3. Explain the maxim 'Nemo Debet Esse - Judex In Propria Causa' with help of decided cases.

   எவரும் அவருடைய வழக்கில் சமன் செய்து சீர்தூக்கும் நடுவர் போல் இரார் என்ற சட்ட முதுமொழியினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Abuse of administrative discretion is effectively controlled by the judiciary" – Explain.

   "நிர்வாக விருப்புரிமையைத் தவறாக பயன்படுத்துவதை, நீதிமன்றம் முறையாகக் கட்டுப்படுத்துகின்றது" – விளக்கவும்.

5. Explain the applicability of 'Estoppel' doctrine in administrative law with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு நிர்வாகவியல் சட்டத்தில் 'முரண்தடை' கோட்பாட்டின் பயன்பாட்டினை விளக்குக.

6. Describe the privileges of Government in legal proceedings.

சட்ட நடவடிக்கைகளில் அரசுக்குள்ள சிறப்புரிமைகளை பற்றி விவரிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Droit Administratif.

ட்ராயட் அட்மினிஸ்ட்ரேடிப்

(b) Hershell's doctrine

கெர்சலின் கோட்பாடு

(c) Chief characteristics of Public Corporation

பொது நிறுவனங்களின் முக்கியப் பண்புகள்

(d) Government Contract

அரசு ஒப்பந்தம்

(e) Air India vs Nargesh Meerza AIR 1981 SC 1829.

ஏர் இந்தியா எதிர் நர்கீஸ் மீர்ஸா AIR 1981 SC 1829.

(f) Improper purpose.

முறையற்ற நோக்கு

(g) Kasturi Lal vs State of U.P. 1965 AIR 1039.

கஸ்தூரி லால் எதிர் உத்திரபிரதேச மாநிலம் 1965 AIR 1039.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' is a High Court Judge. He was transferred to the High Court of another state. 'Y' is an Advocate. He challenges this stating that this transfer would affect the independency of the judiciary. State contends that the advocate has no locus standi to challenge the transfer – Decide.

'X' என்பவர் உயர்நீதிமன்ற நீதிபதியாவார். அவர் இன்னொரு மாநிலத்தில் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்படுகிறார். 'Y' என்ற வழக்கறிஞர் இவ்வாறு மாற்றுப்படுவது நீதிமன்றம் சுதந்திரமாக இயங்குவதைப் பாதிக்கும் என்ற வழக்கு தொடருகிறார். வழக்கறிஞருக்கு இதில் வழக்கிடு உரிமையில்லை என்று அரசு வாதிடுகின்றது – முடிவு செய்க.

9. The Act authorised the Government of Assam to extend to any area any section of the Act. The main policy of the Act was to give to the concerned people an opportunity of filing objections before any tax was imposed on them. The tax was imposed without giving the people concerned a hearing. This was challenged. Decide.

ஒரு சட்டமானது அஸ்ஸாம் அரசுக்கு அதனுடைய பிரிவினை எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் செயல்படுத்தலாம் என அனுமதிக்கிறது. முதன்மை சட்டத்தின் முக்கியமான நோக்கமானது சம்பந்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்பு அளித்து அவர்களின் எதிர்ப்பினை கேட்டப் பிறகு தான் வரி விதிக்கப்பட்ட வேண்டும் என்பதாகும். மக்களின் விளக்கம் கேட்காமல் வரி விதிக்கப்படுகின்றது. இது எதிர்க்கப்படுகிறது முடிவு செய்க.

10. Tax Assessment Order was passed by the Sales Tax Officer against 'X'. The order was challenged by 'X' before the High Court of Delhi by way of writ petition. The writ petition was dismissed on merits. He files another writ petition with some additional grounds – will he succeed?

'X' என்பவருக்கு எதிராக வரி விதித்து விற்பனை வரி அதிகாரி உத்தரவு பிறப்பிக்கிறார். 'X' என்பவர் அவ்வுத்தரவை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். நீதிப்பேராணை மனுவானது டெல்லி உயர்நீதிமன்றத்தால் தகுதிப்பாடு செய்து தள்ளுபடி செய்யப்படுகிறது. அவர் மீண்டும் சில கூடுதல் விவரங்களுடன் மற்றொரு நீதிப்பேராணை மனுதாக்கல் செய்கிறார். அவர் வெல்வாரா?